# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, ஜூன் 28, 2024 | இதழ் 76



Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935


# போதைப்பொருட்களின் பயன்பாடு அதிகரித்து விட்டது எனக்கே இது மிக அச்சமாக உள்ளது

## 10, 12ம் வகுப்பில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு விருது வழங்கினார் - நடிகர் விஜய்

சென்னை, 28 ஜூன் 2024: தமிழகத்திற்கு நல்ல தலைவர்களின் தேவை இருக்கிறது. நன்றாக படித்தவர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகம் தலைவர் நடிகர் விஜய் பேசினார்.

நடிகர் விஜய் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற கட்சியை தொடங்கியுள்ளார். கடந்த வருடம் 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழகம் முழுவதும் தொகுதி வாரியாக முதலிடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத் தொகை மற்றும் சான்றிதழ்களை நடிகர் விஜய் வழங்கினார். இந்நிலையில், இந்த வருடமும் பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு தொகுதி வாரியாக இரண்டு கட்டங்களாக பரிசுகளை வழங்குகிறார். இந்தாண்டு இந்த விழாவை இன்று மற்றும் ஜூலை 3 என இரண்டு கட்டங்களாக நடக்கிறது. விழா நடைபெறும் மண்டபத்திற்கு வந்த நடிகர் விஜய், நாங்குநேரியில் சாதிய




கொண்டனர். மாணவர்கள் மத்தியில் விஜய் பேசியதாவது:

நட்பு வட்டாரத்தில் சிலர் தவறான பழக்கங்களில்

போதைப்பொருட்களின் பயன்பாடு இளைஞர்கள் மத்தியில் அரசாங்கத்தை விட நமது வாழ்க்கையை, பாதுகாப்பை நாம் தான் பார்த்து கொள்ள வேண்டும். உங்களது சுய ஒழுக்கம், சுய கட்டுப்பாடு அதனை எப்போதும் வளர்த்துக் கொள்ளுங்கள். உணீஹ் ஸீஷீ மீஷீ பீகூஷீ஖ுரீஉ என்கிற இந்த உறுதிமொழியை எல்லோரும் எடுத்துக் கொள்ள வேண்டும். தேர்வில் மதிப்பெண் எடுக்க முடியாதவர்கள் சோர்ந்து போக வேண்டாம். வெற்றி முடிவு அல்ல, தோல்வி தொடர்கதை அல்ல. இதனை மட்டும் புரிந்துகொள்ளுங்கள்.

எல்லா துறைகளும் நல்ல துறையே; நமக்கு பிடித்த துறைகளை தேர்ந்தெடுத்து 100 சதவீதம் உழைத்தால் வெற்றி தான். தமிழகத்திற்கு நல்ல தலைவர்களின் தேவை இருக்கிறது. தலைவர்கள் என்பது அரசியலில் மட்டும் சொல்லவில்லை; மாணவர்களான நீங்கள் செல்லும் துறைகளிலும் நல்ல தலைவர்கள் தேவை. நல்லா படித்தவர்கள் அரசியலுக்கு வரவேண்டும்; தலைவர்களாக வரவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# நீட் தேர்வு குறித்து பார்லிமென்டில் விவாதம் நடத்த வேண்டும் - எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி

சென்னை, 28 ஜூன் 2024: நீட் தேர்வு குறித்து பார்லிமென்டில் விவாதம் நடத்த வேண்டும்'' என எதிர்க்கட்சி தலைவர் ராகுல் வீடியோ வெளியிட்டு உள்ளார்.

அந்த வீடியோவில் ராகுல் கூறியதாவது: நீட் தேர்வு மற்றும் வினாத்தாள் கசிவு தொடர்பாக அரசுடன் ஆக்கப்பூர்வமாக விவாதம் நடத்த இண்டியா ' கூட்டணி விரும்பியது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக பார்லிமென்டில் அதனை செய்ய நாங்கள் அனுமதிக்கப்படவில்லை. நீட் தேர்வு விவகாரம் இந்தியா முழுவதும் உள்ள லட்சகணக்கான குடும்பங்களுக்கு கவலையை ஏற்படுத்தும் முக்கியமான விஷயம்.

இந்த விவகாரம் குறித்து விவாதம் நடத்த வேண்டும் எனவும்,



மாணவர்களுக்கு உரிய மரியாதையை அளிக்க வேண்டும் என பிரதமர் மோடியை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அந்த வீடியோவில் ராகுல் கூறியுள்ளார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (28.06.2024), தொழிலாளர் நலத்துறை (அமலாக்கம்) சார்பில் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு தொடர்பாக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி,இ.ஆ.ப., அவர்கள் பரிசுகள் வழங்கி பாராட்டினார். உடன் தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருமதி.செ.மின்னல்கொடி அவர்கள், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.ரெஜினி அவர்கள் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (28.06.2024), திறன் மேம்பாட்டு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (28.06.2024), திறன் மேம்பாட்டு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.






PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

வெள்ளிக்கிழமை,
ஜூன் 28, 2024

# 12 ம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவப் படிப்பில் மாணவர்களை சேர்க்க வேண்டும்
# ‘நீட்’ விலக்கு: மத்திய அரசை வலியுறுத்தி ஸ்டாலின் தீர்மானம் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேறியது



சென்னை, 28 ஜூன் 2024: பிளஸ் 2 (12 ம் வகுப்பு) மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவப் படிப்பில் மாணவர்களைச் சேர்க்க வேண்டும் ; நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு மத்திய அரசு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் ஸ்டாலின் கொண்டு வந்த தீர்மானம் சட்டசபையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வலியுறுத்தி தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆற்றிய உரையில் கூறியதாவது:

மருத்துவத் துறையிலும் பல்வேறு பொது சுகாதாரக் குறியீடுகளிலும் நாட்டிற்கே முன்னோடியாக நம்முடைய தமிழ்நாடு திகழ்கிறது. பல ஆண்டுகளாக நமது தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட சிறப்பான மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை முறைதான் இந்தச் சாதனைகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. முனைவர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் தொழிற்பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வை ரத்து செய்து இந்தச் சாதனைகளுக்கு அடித்தளம் அமைத்தவர் கலைஞர்.

பள்ளிக்கல்வி மதிப்பெண்களின் அடிப்படையில் சமூகநீதியையும் அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கு சமவாய்ப்பையும் உறுதிசெய்யக்கூடிய முன்னோடி சேர்க்கை முறையை நாம் பின்பற்றி வருகிறோம். இந்த முறையால்தான் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மருத்துவர்கள் உருவாகவும் அனைத்துப் பகுதிகளுக்கும் சிறப்பான மருத்துவ ஆனால் 2017 ம் ஆண்டில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வை ஒன்றிய அரசு கட்டாயமாக்கிய பின்பு, இந்த நிலை முற்றிலும் மாறி, மருத்துவப் படிப்பு என்பது ஏழையெளிய மாணவர்களுக்கு எட்டாக்கனி ஆகிவிட்டது. பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லமுடியாத கிராமப்புற, ஏழையெளிய மாணவர்களால் இந்தத் தேர்வில் வெல்ல இயலாது. அதுமட்டுமல்ல; கிராமப்புறப் பகுதிகளிலும் பின்தங்கிய பகுதிகளிலும் வழங்கப்படும் மருத்துவ சேவைகளையும் எதிர்காலத்தில் இந்த முறை பாதிக்கும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், நீட் நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே, அதனை அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். தி.மு.க. சார்பில் மட்டுமல்ல; கழக இளைஞரணி சார்பிலும் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக, மாணவர் அணியையும், மருத்துவர் அணியையும் ஒருங்கிணைத்து, “நீட் விலக்கு -நம் இலக்கு” என்ற மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. இவற்றையெல்லாம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி தன்னுடைய பரிந்துரையில் விரிவாக எடுத்துச் சொல்லியிருந்தார்.

நீட் தேர்வு விவகாரத்தில் தமிழ்நாட்டு மக்கள், அரசியல் கட்சிகள், சமூகச் சிந்தனையாளர்கள் என அனைவரிடமும் அசைக்கமுடியாத கருத்தொற்றுமை நிலவி வருகிறது. இதனடிப்படையில் ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்தச் சட்டமன்றப் பேரவையில் 13.9.2021 அன்று தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், 2021 என்ற சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆனால், நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகும் கவர்னரால் அதற்கான ஒப்புதல் வழங்கப்படாமல் மறுபரிசீலனை செய்திட திருப்பி அனுப்பப்பட்டது.

இந்நிலையில், என் தலைமையில் 5.2.2022 அன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவினை மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்துவது தொடர்பான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, 8.2.2022 அன்று சட்டமுன்வடிவு மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

குற்றச்சாட்டுகள் ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக ஒன்றிய அரசுக்கு கவர்னரால் அனுப்பப்பட்டு, இதுகுறித்து ஒன்றிய அரசால் கோரப்பட்ட அனைத்து விளக்கங்களுக்கும் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் உரிய பதில்களை வழங்கியுள்ள நிலையிலும் இதற்கு ஒப்புதல் அளிக்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தி வருகிறது.

இந்த நிலையில் அண்மையில் நடைபெற்ற நீட் தேர்வின் போது அரங்கேறியுள்ள சம்பவங்கள், போட்டித் தேர்வுகளில் மீது நமது மாணவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையே நிலைகுலையச் செய்துள்ளன.

தேர்வுகள் காலதாமதமாகத் தொடங்கியதாகக் காரணம் காட்டி, விதிகளில் இல்லாத முறையில் கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. இதற்கு எதிர்ப்புகள் கிளம்பியதால், இந்தக் கருணை மதிப்பெண்கள் ரத்து செய்யப்பட்டு, இவர்களுக்கு மறுதேர்வு நடத்தப்பட்டது.

- தேர்வு மையத்தில், தேர்வுக் கண்காணிப்பாளரே விடைத்தாள்களை நிரப்பிய ஊழல் எனக் குவிந்துள்ள பல்வேறு குற்றச்சாட்டுகள், பல ஆண்டுகாலம் உழைத்து, பெரும் செலவழித்து, இந்தப் போட்டித் தேர்வுக்குத் தயாரான மாணவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக மறுத்து, தவறே நடைபெறவில்லை என்று கூறிய ஒன்றிய அரசு, பின்பு உச்சநீதிமன்றத்தில் குட்டு வாங்கிய பின்னரே, இந்தத் தேர்வை நடத்தும் என்டிஏ அமைப்பின் தலைவரை மாற்றியுள்ளது. தேர்வு முறைகேடுகள் குறித்து எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு ஆணையிட்டுள்ளது. முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டு காலமாக நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் தனியே போர் தொடுத்து வந்த நிலையில் நீட் தேர்வின் உண்மையான அவலநிலையை உணர்ந்து, பல்வேறு மாநிலங்களிலும் இதற்கு எதிரான எதிர்ப்பு கிளம்பி வருகின்றது. தமிழ்நாட்டின் குரல் இன்று இந்தியாவின் குரலாக நாடு முழுவதும் எதிரொலிப்பதை அண்மை நிகழ்வுகள் காட்டுகின்றன.

“மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை மாநில அரசுகளே முடிவெடுத்த பழைய நிலையை மீண்டும் கொண்டு வர வேண்டும்” என மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, பிரதமருக்கே கடிதம் எழுதியுள்ளார். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் எனப் பலரும் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு பெற நாம் எடுத்த முயற்சிகளை வெற்றியடைய செய்யவும் தேசிய அளவில் நீட் தேர்வை அறவே அகற்றிடவும் தேவையான முன்னெடுப்பாக, இந்த மாமன்றம் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

“கிராமப்புற, ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக்கல்வி வாய்ப்புகளை கடுமையாக பாதிக்கும் வகையிலும் பள்ளிக் கல்வியை அவசியமற்றதாக்கும் வகையிலும் மாநில மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் உரிமையை மாநில அரசுகளிடம் இருந்து பறிக்கும் வகையிலும் அமைந்துள்ள நீட் தேர்வு முறை அகற்றப்பட வேண்டும்.

இந்தத் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்து, பள்ளிக் கல்வியில் மாணவர்கள் பெறும் 12-வது வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்வதற்காக இந்தச் சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வேண்டுமென்றும் தொடர்ந்து பல முறைகேடுகளுக்கு வழிவகுத்து வரும் இந்தத் தேர்வு முறையை பல்வேறு மாநிலங்களும் தற்போது எதிர்த்து வரும் நிலையில், தேசிய அளவில் நீட் தேர்வு முறை கைவிடப்படும் வகையில் தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது.” இவ்வாறு முதலமைச்சர் பேசினார்.

முதலமைச்சர் முன்மொழிந்த இந்த தீர்மானத்தை வழிமொழிந்து ஆதரித்து வரவேற்று உறுப்பினர்கள் வேல்முருகன், ஈசுவரன், ஜவாகிருல்லா, சதன் திருமலைக்குமார், டி.ராமச்சந்திரன், நாகைமாலி, முகமது ஷாநவாஸ், செல்வப்பெருந்தகை, பால்மனோஜ் பாண்டியன் ஆகியோர் பேசினார்கள்.

பாஜக உறுப்பினர் நயினார் நாகேந்திரன் நீட் தேர்வு வேண்டும் என்று பேசி இந்த தீர்மானத்தை ஏற்க இயலவில்லை என்று கூறி அவர் கட்சி உறுப்பினர்களுடன் வெளிநடப்பு செய்தார்.

# மகளிர் சுய உதவிக் குழுக்களை சேவைத் துறை நிறுவனங்களில் ஒருங்கிணைப்பதன் மூலம்
# ‘லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்குதல்‘ என்ற தலைப்பில் பயிலரங்கு நடைபெற்றது




சென்னை, 28 ஜூன் 2024: 3 கோடி லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்குவது என்ற பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை செயல்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா ஸ்ரீ தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், ‘மகளிர் சுய உதவிக் குழுக்களை சேவைத் துறை நிறுவனங்களில் ஒருங்கிணைப்பதன் மூலம் 'லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்குதல்' என்ற தலைப்பில் பயிலரங்கு நடைபெற்றது.

இந்தப் பயிலரங்கைத் தொடங்கிவைத்துப் பேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயலாளர் திரு சரண்ஜித் சிங், லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்குவதற்கு சேவைத் துறை நிறுவனங்களை ஒருங்கிணைப்பதும் வாய்ப்புகளைக் கண்டறிவதும் இதன் நோக்கம் என்றார். உள்நாட்டு மொத்த உற்பத்தியில் சுமார் 50 சதவீதத்திற்கும் வேலைவாய்ப்பில் 31 சதவீதத்திற்கும் சேவைத்துறை தற்போது பங்களிப்பு செய்வதாகக் குறிப்பிட்ட அவர், சுயஉதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் அவர்களை லட்சாதிபதி சகோதரிகளாக உருவாக்குவதற்கும் எந்த வகையான துணைத்திட்டம் தொடங்கப்பட வேண்டும் என்பது குறித்து மனம் திறந்த விவாதத்தை நடத்துவது மிக முக்கியமானது என்றார்.

இந்தப் பயிலரங்கில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணைச் செயலாளர் திருமதி சுவாதி சர்மா பேசுகையில், தேவை அடிப்படையிலான பொருளாதார நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்துவதற்கான நேரம் வந்துள்ளது என்றும் இதற்கு இந்தப் பயிலரங்கில் பங்கேற்றுள்ள பலதரப்பினரும் வழிகாட்டி, பயிற்சி அளித்து சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் லட்சாதிபதிகளாக மாறுவதற்கு உதவி செய்வார்கள் என்றும் கூறினார்.

இன்றைய பயிலரங்கில் 11 அமைச்சகங்கள் 10 மாநிலங்களில் உள்ள ஊரக வாழ்வாதார இயக்கங்கள், தேசிய ஆதார வள அமைப்புகள், தொழில்நுட்ப உதவி முகமைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## இபிக்ஸ் இன்க் நிறுவனத்தை கையகப்படுத்துவதற்காக இராயா லைஃப்ஸ்பேசஸ் லிமிடெட் தலைமையிலான கூட்டமைப்பின் திட்ட ஆதரவு ஒப்பந்தத்திற்கு இபிக்ஸ் - ன் சுயாதீன இயக்குனர்களின் ஒப்புதல் கிடைத்திருக்கிறது

சென்னை, 28 ஜூன் 2024: இபிக்ஸ் இன்க்- ன் 100% பங்கினை வாங்குவதற்காக இராயா லைஃப்ஸ்பேசஸ் லிமிடெட் தலைமையிலான கூட்டமைப்பால் ஸ்டாக்கிங் ஹார்ஸ் ஏலதாரராக சமர்ப்பிக்கப்பட்ட திட்ட ஆதரவு ஒப்பந்தமானது, இபிக்ஸ் இன்க் நிறுவனத்தின் சுதந்திரமான இயக்குனர்களது ஒப்புதல் கிடைக்கப்பெற்றிருப்பதை இராயா லைஃப்ஸ்பேசஸ் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது. இந்த ஸ்டாக்கிங் ஹார்ஸ் திட்ட ஆதரவு ஒப்பந்தத்தின் படி, இந்த செயல்முறையை முன்னெடுத்துச் செல்ல தேவைப்படுகிறவாறு 5 % ரொக்க டெபாசிட்டையும் இந்த கூட்டமைப்பு செலுத்தியிருக்கிறது. அத்தியாயம் 11-ன் விதிமுறைகளின் கீழ் இபிக்ஸ். இன்க் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரர்களுக்கும் மற்றும் ஏலதாரர்களுக்குமிடையே பேச்சுவார்த்தையின் மூலம் முடிவு செய்யப்படும். சீரமைப்பு திட்டத்தின் வழியாக இந்நிறுவனத்தின் கையகப்படுத்தல் செயல்பாட்டிற்கு வரும். யுஎஸ்ஏ - ன் நிதி நொடிப்பு / திவால் சட்டத்தின் விதிகளின்படி, திவால் நீதிமன்றத்தின் ஒப்புதலுக்கு இத்திட்டம் உட்பட்டதாக இருக்கும். இந்த ஸ்டாக்கிங் ஹார்ஸ் திட்ட ஸ்பான்சர் ஒப்பந்தமானது, இபிக்ஸ் இன்க் தலைமை செயல் அலுவலர் தலைமையிலான முதுநிலை நிர்வாக உயரதிகாரிகளின் ஆதரவை பெற்றிருக்கிறது. ஸ்பான்சர் செய்யப்பட்ட இத்திட்டத்தின் வழியாக, அத்தியாயம் 11-லிருந்து இபிக்ஸ் இன்க் மற்றும் அதனோடு இணைந்திருக்கின்ற கடன்தாரர்களை வெளியில் கொண்டு வருவதற்கு இபிக்ஸ் இன்க் - ன் பிரதிநிதிகளோடு இந்த கூட்டமைப்பு ஒத்துழைப்பு உணர்வோடு செயலாற்றும்.

இபிக்ஸ் இன்க் நிறுவனத்தின் 100% பங்கினை இந்த கூட்டமைப்பு வாங்குவதற்கு இந்த உத்தேச திட்டம் வகை செய்கிறது. ஸ்டாக்கிங் ஹார்ஸ் திட்ட ஆதரவு ஒப்பந்தத்தின்படி இக்கூட்டமைப்பால் வேறு விதமாக ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தால் தவிர, இபிக்ஸ் - ன் உலகளாவிய துணை நிறுவனங்களது சொத்துகள் மற்றும் கடன் பொறுப்புகள் இந்த கையகப்படுத்தலில் உள்ளடங்கும் (வடஅமெரிக்க நிறுவனத்தின் கடன் பொறுப்புகள் தவிர்த்து). இபிக்ஸ் இன்க் என்பது, காப்பீடு, நிதி மற்றும் சுகாதார பராமரிப்பு துறையைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு ஆன்-டிமாண்ட் மென்பொருள் மற்றும் ஈ-காமர்ஸ் சேவைகளை வழங்கும் ஒரு முன்னணி பன்னாட்டு நிறுவனமாகும். சப்ளையர், இபிக்ஸ் இன்க்., உட்கட்டமைப்பு எக்ஸ்சேஞ்ச்கள், கேரியர் அமைப்புகள், ஏஜென்சி அமைப்புகள் மற்றும் இடருக்கான இணக்கநிலை தீர்வுகளிலிருந்து, காப்பீட்டுத் துறையில் இயங்கி வரும் அனைத்து நிறுவனங்களுக்கும் தனிப்பயனாக்கப்பட்ட மென்பொருள் மேம்பாடு வரை விரிவான தீர்வுகளை வழங்கி வருகிறது. அது தற்போது இயங்கி வரும் பிரிவில் புத்தாக்கம் மற்றும் செயல்நேர்த்திக்கான நம்பிக்கை ஒளிவீசும் ஒளிவிளக்காக இராயா புகழ்பெற்றிருக்கிறது. உறுதியான நம்பிக்கை மீது கட்டமைக்கப்பட்ட வலுவான அடித்தளம், தெளிவான தொலைநோக்குப் பார்வையால் வழிகாட்டல், முழு தகவலறிந்து உருவாக்கப்படும் செயல் உத்தி, நேர்த்தியான செயல்பாடு மீது தளராத பொறுப்புறுதி ஆகியவற்றால் சிறப்பான முன்னேற்றத்தை கண்டு வரும் இராயா அதன் தொழில்துறையில் பரவலான அங்கீகாரத்தையும், ஆழமான நம்பிக்கையையும் பெற்றிருக்கிறது.

## இந்தியத் தர நிர்ணய அமைவனத்தின் "புதிய பிஐஎஸ் உரிமம் பெற்றவர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி " இன்று சென்னையில் நடைபெற்றது



சென்னை, 28 ஜூன் 2024: "புதிய பிஐஎஸ் உரிமம் பெற்றவர்களுக்கான வழிகாட்டுதல்" நிகழ்ச்சியை இந்தியத் தர நிர்ணய அமைவனத்தின் சென்னைக் கிளை அலுவலகம் இன்று (28.6.24) நடத்தியது.

பிஐஎஸ் உரிமத்தைப் பெறுவதற்கு, உற்பத்தியாளருக்குத் தேவையான உள்கட்டமைப்பு, பொருத்தமான செயல்முறைக் கட்டுப்பாடுகள், தரக் கட்டுப்பாடு மற்றும் இந்திய தரநிலையின்படி (ஐஎஸ்) தயாரிப்புக்கான சோதனைத் திறன்கள் இருக்க வேண்டும். இந்திய தரநிலையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தேவைகளுக்கும் இணங்க தயாரிப்பு இருக்க வேண்டும். உற்பத்தியாளரின் உள்கட்டமைப்பு, செயல்முறைக் கட்டுப்பாடுகள், தரக் கட்டுப்பாடு, சோதனைத் திறன் ஆகியவற்றின் மதிப்பீட்டு அடிப்படையிலும், உற்பத்தி வளாகத்தைப் பார்வையிடுவதன் மூலமும் பிஐஎஸ் உரிமம் வழங்குகிறது.

உரிமதாரர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் மிக உயர்ந்த தரத்தைப் பராமரிக்கவும், தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் புதுமைகளை ஆதரிக்க பிஐஎஸ் வழங்கும் வளங்கள், நிபுணத்துவம் மற்றும் வலைப்பின்னலைப் பற்றி தெரிந்து கொள்ளவும் உரிமதாரர்களுக்கு இது ஒரு தளத்தை வழங்கியது. உரிமம் பெற்றவர்கள் தரம் மற்றும் பாதுகாப்புத் தரங்களில் நாட்டின் முதன்மையான நிறுவனத்துடன் இணைவதற்கு இந்த நிகழ்வு உதவும்.

இந்நிகழ்வில் பிஐஎஸ் சென்னைக் கிளை அலுவலக இயக்குநர் திருமதி. ஜி.பவானி, விஞ்ஞானி திரு பி ஜே கௌதம், விஞ்ஞானி திரு ஸ்ரீஜித் மோகன் ஆகியோர் வழிகாட்டி நிகழ்ச்சியை நடத்தினர். உரிமம் பெற்றவர்கள் தரப்பிலிருந்து உயர் நிர்வாக அதிகாரி மற்றும் தரக் கட்டுப்பாட்டுப் பணியாளர்களும் சுமார் 56 உரிமதாரர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.


## ஸ்ரீராம் ஏஎம்சி அறிமுகம் செய்யும் ஸ்ரீராம் நிஃப்டி 1டி ரேட் லிக்விட் (வளர்ச்சி)

சென்னை, 28 ஜூன் 2024: ஸ்ரீராம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி (ஸ்ரீராம் ஏஎம்சி), நிஃப்டி 1டி ரேட் இன்டெக்ஸ்-ல் ஒரு திறந்த முனை கொண்ட பங்குச்சந்தையில் வர்த்தகம் செய்யப்படுகிற ஃபண்டான ஸ்ரீராம் நிஃப்டி 1டி ரேட் லிக்விட் இடி எஃப் (வளர்ச்சி) என்பது தொடங்கப்படுவதை மகிழ்ச்சியுடன் அறிவித்திருக்கிறது. ஸ்ரீராம் நிஃப்டி 1டி ரேட் லிக்விட் இடி எஃப் (வளர்ச்சி)-ன் நியூ ஃபண்டு ஆஃபர், 2024 ஜூலை 1-ம் தேதி முதல் 2024 ஜூலை 3-ம் தேதி வரை சப்ஸ்கிரிப்ஷன்களுக்காக திறந்திருக்கும். முதலீட்டாளர்கள், அவர்களது செக்யூரிட்டி தரகர்கள் வழியாக அல்லது அவர்களுக்கு அருகிலுள்ள கேம்ஸ் முதலீட்டாளர் சேவை மையத்தில் இதற்கான படிவங்களை சமர்ப்பிப்பதன் வழியாக இதற்கு விண்ணப்பிக்கலாம். அதிக நீர்மைத்தன்மை (லிக்விடிட்டி) ஒப்பீட்டளவில் குறைவான வட்டி விகித இடர்வாய்ப்பு மற்றும் ஒப்பீட்டளவில் குறைவான கிரெடிட் இடர்வாய்ப்பு ஆகிய அம்சங்களுடன் எளிதான ரொக்க மேலாண்மை வசதியினை முதலீட்டாளர்களுக்கு ஸ்ரீராம் நிஃப்டி 1டி ரேட் லிக்விட் இடி எஃப் (வளர்ச்சி) திட்டம் வழங்கும். முதலீட்டாளர்கள், அவர்களது சேமிப்பு கணக்கில் பணத்தை வெறுமனே போட்டு வைத்திருப்பதற்கு பதிலாக அவர்களது டீமேட் கணக்கு வழியாக இந்த இடிஎஃப் திட்டத்தில் தங்களது சும்மா இருக்கும் ரொக்க பணத்தை முதலீடு செய்வதன் மூலம் அதிக வருவாயை ஈட்ட முடியும். தினசரி சிறிய அளவிலான டிவிடெண்ட்களை கண்காணிக்கும் அவசியமின்றி இந்த வளர்ச்சி திட்டமானது ஆதாயத்தை ஒன்று சேர்த்து கூட்டி வழங்குகிறது. இந்த ஃபண்டின் மீட்சியின்போது மட்டுமே (ரிடெம்ப்ஷன்) மூலதன ஆதாயவரி பொருந்தும். www.shriramamc.in/SNifty1டிஇடி எஃப் என்ற இணையதளத்தில் தினசரி பிரசுரிக்கப்படும் வளர்ச்சி என் ஏ வி-ன் வழியாக தினசரி ஆதாயங்களை எளிதாக கண்காணிக்க முடியும். ஓவர்நைட் பணச்சந்தையில் மட்டுமே இந்த ஃபண்டு முதலீடு செய்வதால் குறைவான வட்டி விகித ஏற்ற, இறக்கம் மட்டுமே இதில் இருக்கும்; அரசு கடன் பத்திரங்கள் பின்புல ஆதரவு கொண்ட லிக்விட் பத்திரங்களுக்கு வெறுமனே ஒருநாள் மட்டுமே வெளிப்படுத்தல் இருக்குமென்பதால் குறைவான இடர்வாய்ப்பையும் இது கொண்டிருக்கும். உடனடியாக மாற்றத்தக்க நீர்மைத்தன்மையோடு நிலையான ஆதாய ஈட்டத்தையும் கொண்டிருக்கும் ஸ்ரீராம் நிஃப்டி 1டி ரேட் லிக்விட் இடி எஃப் (வளர்ச்சி) ஃபண்டானது மார்ஜின் வர்த்தகத்திற்கான ஒரு பாதுகாப்பு பிணையாக இருப்பதற்கும் தகுதி நிலை கொண்டதாக ஆக்கப்படும் என்பதால் தீவிரமான ஈக்விட்டி பங்கு முதலீட்டாளர்களுக்கு அதிகளவிலான சௌகரியத்தை இது வழங்கும். ஸ்ரீராம் ஏஎம்சி-ன் நிர்வாக இயக்குநர் & தலைமை செயல் அலுவலர் திரு. கார்த்திக் ஜெயின் இது குறித்து கூறியதாவது: "ஸ்ரீராம் ஏஎம்சி-ல், இன்றைய வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளுக்கு பொருந்துகிறவாறு முதலீட்டு திட்டங்களை வழங்கவும் மற்றும் புத்தாக்க முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபடவும் நாங்கள் தொடர்ந்து தீவிரமாக செயலாற்றி வருகிறோம். ஸ்ரீராம் நிஃப்டி 1டி ரேட் லிக்விட் இடி எஃப் (வளர்ச்சி) ஃபண்டு அறிமுகத்தின் மூலம் சிறப்பான ஆதாயங்கள், அதிக நீர்மைத்தன்மை மற்றும் ஒப்பீட்டளவில் குறைவான இடர்வாய்ப்பு ஆகிய ஆதாயங்களை ஒருங்கிணைக்கின்ற ஒரு திறன்மிக்க ரொக்க மேலாண்மை வழிமுறையை நாங்கள் வழங்குகிறோம். நிலைத்தன்மை கொண்ட பாதுகாப்பான ஓவர்நைட் பிராடக்டுகளில் முதலீடு செய்வதன் வழியாக இடர்வாய்ப்பை குறைக்கின்றபோதே வெறுமனே ஆதாயம் ஈட்டாமல் இருக்கும் பணத்தின் மீது தங்களது வருவாயை அதிகரிக்க விரும்புகிற முதலீட்டாளர்களுக்கு மிக உகந்ததாக இருக்கும். தீவிர செயல்பாடுள்ள வர்த்தகர்கள், மார்ஜின் உத்தரவாதத்தின் கூடுதல் ஆதாயத்தையும் பெறுவார்கள். நெகிழ்வுத்திறன் கொண்ட, பாதுகாப்பான முதலீட்டு தீர்வுகளுக்கு அதிகரித்து வரும் விருப்பம் காணப்படுகிற தற்போதைய நிதிசார் தளத்தை கருத்தில் கொள்ளும்போது தங்களது நிதிசார் குறிக்கோள்களை அடைவதற்கு வாடிக்கையாளர்களுக்கு உதவுவதில் இந்த ஃபண்டு ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்."

சுருக்கமாக சொல்வதென்றால், ஸ்ரீராம் நிஃப்டி 1டி ரேட் லிக்விட் இடி எஃப் (வளர்ச்சி) திட்டத்தில் கீழ்கண்ட மூன்று அம்சங்கள் முதன்மை வகிக்கின்றன: சேமிப்போடு ஒப்பிடுகையில் அதிக ஆதாயம் மார்ஜின் உத்தரவாத த்துடன் சிரமமற்ற எளிதான ரொக்க மேலாண்மை மற்றும் வளர்ச்சி திட்டத்துடன் என் ஏ வி-ல் விலை உயர்வு. இந்த என் எஃப் ஓ-ன் பரப்புரை கருத்தாக்கம் கீழ்கண்ட சொற்றொடரில் நேர்த்தியாக வெளிப்படுகிறது: சேவிங்ஸ் ஃபி, மார்ஜின் ஃபிஞ் குரோத் பி குரோத்.

இந்த என் எஃப் ஓ-ன் போது குறைந்தபட்ச சப்ஸ்கிரிப்ஷன் என்பது ரூ.1000 மடங்கு அல்லது அதன் பன்மடங்காக இருக்கும். இந்த ஃபண்டின் மேலாளர்களாக திரு. தீபக் ராமராஜூ மற்றும் மிஸ். கார்கி பட்டாச்சார்யா பேனர்ஜி ஆகியோர் செயல்படுவார்கள்.

## அமெரிக்க அதிபர் தேர்தலையொட்டி ஜோ பிடன் - டிரம்ப் நேரடி விவாதம்



சென்னை, 28 ஜூன் 2024: அமெரிக்க அதிபர் தேர்தலையொட்டி ஜோ பிடன் டொனால்டு டிரம்ப் ஆகியோர் நேரடி விவாதத்தில் ஈடுபட்டனர்.

நடப்பாண்டு நவம்பரில் நடைபெற இருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில், ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய அதிபராக இருக்கும் ஜோ பைடன் மீண்டும் போட்டியிடுவதாக அறிவித்திருந்தார். அவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபரான டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார். அமெரிக்க அரசியல் தேர்தல் களத்தில், முக்கிய அம்சங்களில் ஒன்று, தேர்தலில் வேட்பாளராக நிற்பவர்கள் நேருக்கு நேர் விவாதித்து கொள்ளும் நிகழ்ச்சியாகும். இது அந்நாட்டு வழக்கமாக நடைமுறையில் இருந்து வருகிறது.

இதனால் நடைபெற இருக்கும் இந்த தேர்தலின் முதலாவது நேரடி விவாத நிகழ்ச்சி இன்று நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சியில் ஜோ பைடனும், டொனால்ட் டிரம்ப்பும் நேருக்கு நேர் சந்தித்து விவாதித்து வருகின்றனர். மேலும், இந்த நிகழ்ச்சியில் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பட்டியலிட்டு வாக்காளர்களிடம் ஆதரவு கேட்பார்கள். இந்த விவாதம் மொத்தம் 90 நிமிடம் நடத்தவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் நேருக்கு நேர் விவாதம் செய்யும் போது கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது என்ற நிபந்தனைகளும் உண்டு. மேலும், இந்த விவாதத்தை நேரில் காண பொதுமக்கள், பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், டிரம்ப்-ஃபைடன் இருவரும் அதிபர் வேட்பாளர்களாக இதுபோல நேருக்கு நேர் விவாதம் செய்வது இது 3வது முறை ஆகும். கடந்த 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஒருவரையொருவர் எதிர்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிஜியன் பிராண்டின் கீழ் ஸ்டவ்கிராஃப்ட் அறிமுகம் செய்யும் ‘எலெக்ட்ரா’ மிகச்சிறப்பான எலக்ட்ரிக் பிரஷர் குக்கர் சாதனம்



சென்னை, 28 ஜூன் 2024: சமையல் சாதனங்கள் உற்பத்தி துறையில் இந்தியாவின் முன்னணி நிறுவனமான ஸ்டவ்கிராஃப்ட், அதன் பிஜியன் பிராண்டின் கீழ், புரட்சிகரமான எலக்ட்ரிக் பிரஷர் - குக்கிங் சாதனத்தை ‘எலெக்ட்ரா’ என்ற பெயரில் அறிமுகம் செய்வதை பெரும் உற்சாகத்துடன் அறிவிக்கிறது. உங்கள் சமையல் அனுபவத்தை அதிக வசதியானதாக, திறமையானதாக மற்றும் பாதுகாப்பானதாக ஆக்குவதற்கென்றே வடிவமைக்கப்பட்டிருக்கும் எலெக்ட்ரா, இந்திய இல்லங்களில் சமையலறையின் சௌகரியத்தை மறுவரையறை செய்யவும்,ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கும் சமையல் படைப்பாக்கத்திறனை வெளிக்கொணரவும் எலெக்ட்ரா தயார்நிலையில் இருக்கிறது. நுகர்வோரின் தேவைகளை மிகவும் திருப்பதிகரமாக பூர்த்திசெய்யும் தனித்துவமான அம்சங்கள் கொண்டதாக எலெக்ட்ரா எலக்ட்ரிக் பிரஷர் குக்கர் சாதனம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் மிக நேர்த்தியான விளைவுகளை உருவாக்க சமையலில் ஒரே மாதிரியான நிலைப்புத்தன்மையை இது உறுதி செய்கிறது. “கண்காணிப்பு தேவைப்படாத இயக்கத்திறன்” அம்சம் இதில் இருப்பதால், இதை பயன்படுத்தும் நேரத்தில், வேறுபிற பணிகளைச் செய்ய பயனாளிகளை இது அனுமதிக்கிறது; சமையல் பணி நிறைவடைந்தவுடன் தானியக்கமாக (ஆட்டோ ஆஃப்) சுவிட்ச்ஆஃப் செய்யும் அம்சம் பாதுகாப்பை மேம்படுத்துகிறது. அதுமட்டுமல்ல; வழக்கமான பிரஷர் குக்கர்களில் பொதுவாக காணப்படும் தொந்தரவான விசில் சத்தமின்றி, இது இயங்குகிறது. விரும்புகின்ற நேரத்தில் உணவு தயாராக இருப்பதை உறுதிசெய்ய இதன் டிலே ஃபங்ஷன் பயனாளிகளை அனுமதிக்கிறது. முன்னதாகவே திட்டமிட்டு, சமையல் பணியை இச்சாதனம் மேற்கொள்வதற்கு இந்த அம்சம் வழிவகுக்கிறது. இதனால், இதன் ஃபிரஷ்னஸ் மற்றும் சுவை ஒருபோதும் சமரசம் செய்யப்படுவதில்லை. ‘கீப் வார்ம்’ நிலை, பரிமாறுவதற்கு உரிய நேரத்தில் பொருத்தமான வெப்பநிலையில் சமைத்த உணவை வைத்திருக்க வகை செய்கிறது. சமையல் செயல்முறைக்கு இது கூடுதல் சௌகரியம் என்பதை மறுப்பதற்கில்லை. இத்தகைய அம்சங்கள், குடும்பத்திற்காக சுவையான மற்றும் ஊட்டச்சத்துள்ள உணவை தயாரிக்கும் அதே வேளையில், நேரத்தையும், ஆற்றலையும் சேமிக்கின்ற நம்பகமான, வசதியான சமையலறை சாதனமாக இதனை ஆக்குகின்றன. எலெக்ட்ரா அறிமுகம் மீது தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, சமையலின் எதிர்காலம் குறித்த தனது தொலைநோக்கு கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொண்ட ஸ்டவ்கிராஃப்ட் - ன் நிர்வாக இயக்குனர் திரு. ராஜேந்திர காந்தி கூறியதாவது: “எலெக்ட்ரா அறிமுகம் மூலம் சமையலறை புத்தாக்கத்தில் ஒரு புதிய தர அளவுகோலை நாங்கள் நிறுவுகிறோம். இந்த மிக நவீன சாதனம் என்பது, வெறுமனே சௌகரியத்தை வழங்குவது மட்டுமல்ல; இந்திய இல்லங்களில் சமையற்கலையின் செயல்தளத்தையே மாற்றியமைப்பது குறித்ததாகும். சிறப்பான நேர்த்தி நிலையை உறுதி செய்வதில் எமது தளராத தொடர் முயற்சியின் வெளிப்பாடாக எலெக்ட்ரா இருக்கிறது; தங்களது சமையல் அனுபவத்தை மேம்படுத்துகின்ற நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு நுகர்வோர்கள் திறனதிகாரம் பெறச்செய்வது என்ற குறிக்கோள் மீதான எமது அர்ப்பணிப்பிற்கு எடுத்துக்காட்டாகவும் இது திகழ்கிறது.” நிலைமாற்றம் ஏற்படுத்தும் எலெக்ட்ரா - ன் தாக்கம் குறித்து ஸ்டவ்கிராஃப்ட் - ன் தலைமை சந்தையாக்கல் அதிகாரி டாக்டர். நந்தா பேசுகையில், “எலெக்ட்ரா என்பது, ஒரு தயாரிப்பு சாதனம் என்பதையும் கடந்ததாகும். சமையல் தொழில்நுட்பத்தில் ஒரு அதிரடி மாற்றத்தை இது உருவாக்குகிறது. இதுவரை கண்டிராத சௌகரியத்துடன் பன்முக இயக்கத்திறனை ஒன்று சேர்த்திருப்பதன் வழியாக, வீட்டு சமையலை எலெக்ட்ரா மறுவரையறை செய்யும் என்பதில் ஐயமில்லை. தங்களது சமையல் திறனை பயனாளிகள் ஆராயவும், சிரமமின்றி வீட்டு சமையலில் அற்புதமான உணவுகளை சமைக்கவும் இந்த புத்தாக்கம் அவர்களுக்கு உத்வேகத்தையும், உந்துதலையும் தரும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.” என்று குறிப்பிட்டார். சமையலில் பல்வேறு வழிமுறைகளை (மோட்ஸ்) எலெக்ட்ரா வழங்குகிறது. பிரஷர் குக்கிங், மெதுவாக சமைப்பது, வேக வைப்பது, வதக்குவது மற்றும் பேக்கிங் ஆகியவை இந்த வழிமுறைகளுள் உள்ளடங்கும். தெவிட்டாத சுவைகளில் குழம்புகள், ஸ்டூக்கள் முதல், இனிய டெசர்ட்கள் வரை பல்வேறு வகைப்பட்ட உணவுகளை தயாரிக்கவும், சுவை குறையாமல் சூடாகப் பரிமாறவும் இது அனுமதிக்கிறது. பயன்படுத்துவதற்கு எளிதான ஸ்மார்ட் டச் இன்டர்ஃபேஸ் இதன் ஈர்ப்பை மேலும் உயர்த்துகிறது. சமையல் செட்டிங்குகளை எளிதாக தேர்வு செய்யவும், வெப்பநிலைகளையும், அழுத்த அளவுகளையும் மாற்றியமைக்கவும் மற்றும் நிகழ்நேரத்திலேயே சமையலின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் பயனாளிகளுக்கு இது ஏதுவாக்குகிறது. புதிதாக சமையலை செய்யத் தொடங்கும் கத்துக்குட்டிகள் கூட நம்பிக்கையோடும், எளிதாகவும் ஒரு தொழில்முறை சமையல் கலைஞர் அளவிற்கு சிறப்பான உணவுகளை தயாரிப்பதில் சாதிக்க முடியும்.

# கோகோ-கோலா நிறுவனத்தின் ஹானஸ்ட் டீ #பைண்ட் யுவர் குட் என்னும் விளம்பரப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது




சென்னை, 28 ஜூன் 2024: ஆர்கானிக் க்ரீன் டீயுடன் கூடிய அருந்தத் தயாரான பானமான ஹானஸ்ட் டீ, புகழ்பெற்ற எழுத்தாளர், கட்டுரையாளர் மற்றும் ஆரோக்கிய ஆர்வலர் டுவிங்கிள் கன்னாவுடன் இணைந்து அதன் புதிய #பைண்ட் யுவர் குட் விளம்பரப் பிரச்சாரத்தை அறிவிக்கிறது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள விளம்பரத்தில், பிரபலமான மகாய்பரி டீ எஸ்டேட்டில் இருந்து பெறப்பட்ட ஆர்கானிக் கிரீன் டீயில் இருந்து தயாரிக்கப்படும் #ஹானஸ்ட் டீ உடன் தனது அன்றாட குழப்பங்களுக்கு மத்தியில் ட்விங்கிள் கன்னா அமைதியாக இருப்பதைக் காட்டுகிறது.

சமூக எதிர்பார்ப்புகள் நிரம்பிய உலகில், ஹானஸ்ட் டீயின் விளம்பரப் பிரச்சாரம் மக்கள் தங்களை ஆசுவாசப்படுத்தும் வழியை வரையறுக்கத் தூண்டுகிறது. இந்த தேடலில் ஒரு ஆதரவான கூட்டாளியாக, பிராண்ட் எலுமிச்சை-துளசி மற்றும் மாம்பழம் ஆகிய இரண்டு சிறந்த சுவைகளை வழங்குகிறது.

விளம்பரப் பிரச்சாரத்தைத் தொடங்க, ஹானஸ்ட் டீ சமூகத் திரைப்படங்கள் மற்றும் டிஜிட்டல் செயல்பாடுகளின் வரிசையை வெளியிடும், பல்வேறு தளங்களில் நுகர்வோருடன் ஈடுபடும். டபிள்யூ பி பி ஒப்பன் எக்ஸ் ஆல் கருத்துருவாக்கம் செய்யப்பட்ட விளம்பரப் பிரச்சாரப் படம், டுவிங்கிள் தனது செய்ய வேண்டியவை பட்டியலை எதிர்கொள்வது போன்ற ஒரு தொடர்புடைய தருணத்தைப் படம்பிடிக்கிறது. அவர் ஓய்வெடுக்க உட்காரும்போது, ஹானஸ்ட் டீயை பருகிவிட்டு, "உனக்கு எது நல்லது என்பதை நீயே தீர்மானிக்க வேண்டும்’ என்பதை கூறுகிறது.

ஹானஸ்ட் டீ உடனான ஒத்துழைப்பு குறித்து டுவிங்கிள் கன்னா அவர்கள், “ஒரு நல்ல, முழுமையான வாழ்க்கைக்கான எனது மந்திரத்தை எதிரொலிக்கும் #பைண்ட் யுவர் குட் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி மற்றும் சமநிலையைக் கண்டறிவதன் முக்கியத்துவத்தால் தூண்டப்பட்டு, ஹானஸ்ட் டீயின் பிரச்சாரம் நவீன பெண்ணின் நல்வாழ்வில் நேர்மறையான மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறது" என்று கூறினார்.

புதிய விளம்பரப் பிரச்சாரத்தின் துவக்கம் குறித்து கருத்து தெரிவித்த, கோகோ கோலா கம்பெனி, இந்தியா மற்றும் தென்மேற்கு ஆசிய ஆப்பரேட்டிங் யூனிட்டின் சந்தைப்படுத்தல் மூத்த இயக்குனர் திரு.ருசிரா பட்டாச்சார்யா அவர்கள், “உங்கள் அன்றாட வாழ்க்கையின் குழப்பங்களுக்கு மத்தியில், அமைதி மற்றும் ஆசுவாசத்தின் சிறிய தருணங்களைக் கொண்டாடும் #பைண்ட் யுவர் குட் விளம்பரப் பிரச்சாரத்தை தொடங்குவதில் நேர்மையான ஹானஸ்ட் டீ பெருமிதம் கொள்கிறது. டுவிங்கிள் கன்னாவுடனான கூட்டாண்மை, இந்த வேகமான உலகில் சமநிலை மற்றும் ஆரோக்கியம் பற்றிய ஒருவரின் தனிப்பட்ட யோசனையை ஆதரிக்கவும் ஊக்கப்படுத்தவும் எங்கள் நோக்கத்துடன் எதிரொலிக்கிறது” என்று கூறினார்.

இச்சமீபத்திய விளம்பரப் பிரச்சாரம் பற்றிய தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட டபிள்யூ பி பி ஒப்பன் எக்ஸ் -ன் செயல் படைப்பாற்றல் இயக்குனர் திரு.முகுந்த் ஒலேடி அவர்கள், “எங்களின் சமீபத்திய விளம்பரப் பிரச்சாரமான #பைண்ட் யுவர் குட், நம்மில் பலர் அடிக்கடி மறந்துபோகும் ஒரு மிக முக்கியமான விஷயத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது, இது நமது அன்றாட வாழ்வில் அமைதி மற்றும் மகிழ்ச்சியின் சிறிய தருணங்களுக்கு நேரம் ஒதுக்குகிறது" என்று டுவிங்கிள் கன்னாவுடனான ஒத்துழைப்பைப் பற்றி அவர் கூறினார். “இந்தப் விளம்பரப் பிரச்சாரத்திற்காக டுவிங்கிள் கன்னாவுடன் இணைந்தது உண்மையிலேயே மகிழ்ச்சியான அனுபவமாகும். பெண்களின் நல்வாழ்வுக்கான ஆதரவாளராக, இந்த பிரச்சாரத்தின் மூலம் நாங்கள் தொடர்பு கொள்ள விரும்பும் நுணுக்கங்களை அவர் இயல்பாகவே வெளிப்படுத்துகிறார் என்று கூறினார்.



திருச்சி, 28 ஜூன் 2024: தமிழ்நாட்டில் ஒரு தயாரிப்புக் கண்காட்சி வேன் பயணத்தை செயிண்ட்-கொபைன் இன்று கொடியசைத்து துவக்கிவைத்தது. குளிர்ச்சியான வீடுகளுக்கான ‘எஸ் ஜி ஜி சன்பான் சோலார் கண்ட்ரோல் கிளாஸ்கள்‘, சிறந்த வலிமை மற்றும் பாதுகாப்பிற்கான ‘செயிண்ட்-கொபைன் டஃபண்ட் கிளாஸ்‘ ஆகியவை குறித்த விழிப்புணர்வை இந்தப் பயணம் ஏற்படுத்தும்.

# ஆந்திராவில் இருந்து திருப்பூருக்கு கடத்தி வந்த 7 ½ கிலோ கஞ்சா பறிமுதல்: பெண் உள்பட 3 பேர் கைது

சென்னை, 28 ஜூன் 2024: ஆந்திராவில் இருந்து திருப்பூருக்கு கடத்திவரப்பட்ட 7½ கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார் பெண் உள்பட 3 பேரை கைது செய்தனர்.

ஆந்திராவில் இருந்து திருப்பூருக்கு அதிக அளவில் கஞ்சா கடத்தி வருவதாக போலீசாருக்கு தொடர்ந்து புகார்கள் வந்தது. இதைத்தொடர்ந்து திருப்பூர் மாநகர மதுவிலக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரபாதேவி தலைமையில் சப்-இன்ஸ்பெக்டர்கள் ரமாஅனிதா, கிரிஜா, ஏட்டுகள் சுரேஷ், முகமதுசபி, சரவணன் ஆகியோர் கொண்ட குழுவினர் ரெயில் நிலையம் எதிரே உள்ள தலைமை தபால் நிலையம் முன்பு சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்துக்கு இடமாக நின்ற பெண் உள்பட 3 பேரிடம் போலீசார் விசாரிக்கையில் ஒருவர் மட்டும் தப்பி ஓடினார். அவரையும் பிடித்து விசாரித்தனர். அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்ததில் கஞ்சா இருந்தது தெரியவந்தது. மொத்தம் 7 கிலோ 600 கிராம் எடையுள்ள கஞ்சா பொட்டலங்கள் இருந்தன. ஆந்திராவில் இருந்து 3 பேரும் மொத்தமாக வாங்கி ரெயில் மூலமாக வந்து திருப்பூரில் இருந்து சொந்த ஊருக்கு செல்ல திட்டமிட்டு இருந்தனர். விசாரணையில் அவர்கள் தேனியை சேர்ந்த முருகேஸ்வரி (வயது 49), கேரள மாநிலம் ஆனைக்கட்டி பகுதியை சேர்ந்த அமீர் (38), கோழிக்கோட்டை சேர்ந்த முகமது சபிர் பாஷா (23) என்பது தெரியவந்தது. இவர்களில் முருகேஸ்வரி, அமீர் ஆகியோர் மீது ஏற்கனவே கஞ்சா வழக்குகள் உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மாநகர மதுவிலக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்த போலீசார் 7 கிலோ 600 கிராம் கஞ்சாவையும் பறிமுதல் செய்து முருகேஸ்வரி, அமீர், முகமது சபிர் பாஷா ஆகிய 3 பேரையும் கைது செய்தனர்.